29th October 1962]

SRIMATHI T. N. ANANDANAYAKI : Is there any proposal to construct Tourist Homes in all the Pilgrim Centres in the State?

கனம் திரு ஜி. பூவராகன் : *எல்லா இடங்களிலும் கிடையாது. மதுரை, தஞ்சாவூர், மகாபலிபுரம் போன்ற இடங்களில்தான் இருக்கிறது.*

Secondary School-Leaving Certificate

* 832. *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the students once failed in the X Standard (Secondary School-Leaving Certificate) are not allowed to continue their studies in the schools and to sit for the Examination again; and

(*b*) if so, the reasons thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no such ban.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : *பள்ளியில் படிக்காமல் பல மாணவர்களால் பரிட்சை எழுதித் தேர்ச்சி அடைய முடியாது என்ற காரணத்தினால் மறுபடியும் பள்ளியில் சேர்ந்து படித்தே பரிட்சை எழுதுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன் வருமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *இந்தக் கேள்வியிலேயே, பள்ளியில் சேர்ந்துப் படிப்பதற்குத் தடையுண்டா என்பதற்குத் தடை கிடையாது என்று சொன்னேன். வேறு ஏதாவது விவரம் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போடவேண்டும்.*

திரு. வை. சங்கரன் : *இதுபோன்ற பழக்கமானது தனிப்பட்ட பிரைவேட் பள்ளிகளில் நடைமுறையில் இருந்து கொண்டிருப் பதைச் சர்க்கார் உணர்ந்து, இது சம்பந்தமாகக் கல்வி அதிகாரிகளை விட்டு விசாரிக்கச் சொல்லி, தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *இதைப்பற்றிக் கனம் அங்கத் தினர் குறிப்பிட்ட தகவல்களைக் குறித்து அனுப்பினால் அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்.*

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : *தற்போது ஒருதரம் எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையில் தவறினவர்கள் பிரைவேட்டாகப் படித்து பரிட்சை எழுதலாம் என்று இருக்கிறது. ஆனால் மறு படியும் அவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தே பரீட்சைக்கு உட்கார ஏற்பாடு செய்யுமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கலாம் என்றுதான் சொன்னேன்.*